இளைய பாரதம்

ரா. பொன்ராசன்

—மாரர்—

குழந்தை எழுத்தாளர் சங்கம் • கவிதைப் போட்டி •
இரண்டாம் பரிசு 1975

இளைய பாரதம்

ஆசிரியர்:

-: ரா. பொன்ராசன் :-

கிடைக்குமிடம்:

P.K. புக்ஸ்,

184, தெற்கு வெளி வீதி,

மதுரை.

இளைய பாரதம்
1976

ஆசிரியரின்
பிறநூல்கள்:

பாப்பாப் பாட்டு

தாத்தாப் பாட்டு

விலை: ரூ 1-80

நூல் அச்சிட்டோர்:

அண்ணு அச்சகம், 64, செக்காலை ரோடு,

காரைக்குடி-623 001

★ வாழ்த்துரை ★

அருள்நெறித்தந்தை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்

★

ஆசிரியர்-கவிஞர் பொன்ராசன், இளைய பாரதத்திற்கு இனிய கவிதைகளை வழங்கியுள்ளார். கவிதைகள் இனிய சொற்களில் எழில் மிக்க நடையில் பொருட்சுவை நிறைந்ததாகப் புதுமை நலம் மிக்கதாக விளங்குகின்றன.

புகழ் மிக்க பாரதத்தில் புல்லுருவியென விளங்கும் தனி உணர்வைச் சாய்க்க "ஊருக்கு உழைப்போம்" என்ற கவிதை பயன்படுகிறது. எல்லோருக்கும் எல்லாம் என்ற சமுதாயம் அமைய "உழைத்துண்போம்" என்ற கவிதை வழி வகுக்கிறது பொதுவாகக் கவிஞர்களுக்குக் காடுகளைக் கண்டால் களிப்பு மிகுதி. கவிதைகளைப் பொழிவர். காடுகளில் பிறந்த கவிதைகள் காவியங்கள் ஏராளம்! இந்தக் கவிஞரும் மரங்களை வளர்க்கத் தூண்டுகிறார்; மரங்களை வாழ்த்துகிறார்; காடுகளைக் காக்கும் காவற்படை யென்று சிங்கம், புலி ஆகியவற்றை உருவகம் செய்கிறார். வரலாற்று வெள்ளத்தில் இழுத்தெறியப்படுவோரே ஏராளம். காலவெள்ளத்தில் காலூன்றி நின்று வரலாற்றைப் படைப்போர் எண்ணிக்கை குறைவு. இன்றைய இளையபாரதம் புதியவரலாற்றைப் படைக்க வேண்டுமென்று பாடுகின்றார். தமிழ்க் குழந்தைகளை, பாரதக் குடிமக்களாக்கி உலகக் குடிமக்களாக வளர கவிஞர் அழைக்கிறார்.

கவிதை, இளமை உள்ளத்தில் பிறந்திருக்கிறது. முப்படையாத புதிய இளைய பாரதத்தைப் படைக்க இளைய பாரதத்தினருக்கு ஆற்றலை வழங்குகிறது. வளர்க இளையபாரதம். வாழ்க கவிஞர்! இளையபாரதத்தினுய் வா! வா!

இன்ப அன்பு.

அடிகளார்

குழந்தை எழுத்தாளர் சங்க
தலைவரும், நிறுவனருமான
குழந்தைக் கவிஞர்

திரு அழ. வள்ளியப்பா அவர்களின்

முன்னுரை

—★—

குழந்தைகளுக்காக வெளிவரும் புத்தகங்களில் சிறந்தவற்றிற்கு இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி வருகின்றன. மிகச் சிறப்பாக எழுதக்கூடிய பல எழுத்தாளர்கள் கூட தங்களது எழுத்தோவியங்களை அச்சிலே காண இய லாது இருக்கின்றனர். தக்க திறனிருந்தும், தங்கள் படைப்புகள் அச்சிலே வராததால் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை இழந்து விடுகின் றனர்.

இக்குறையைப் போக்க, தென்மொழிப் புத்தக டிரஸ்டில் நான், குழந்தைப் புத்தகத் தனி அலுவல ராகப் பணியாற்றிய போது புத்தகமாக வெளியிடு வதற்கேற்ற கையெழுத்துப் பிரதிகளுக்கான போட் டிகளை தென்மொழிகள் நான்கிலும் நடத்தினோம். பரிசுபெற்ற கையெழுத்துப் பிரதிகளைத் தவிர, பரிசு பெறாத,போட்டிகளுக்குக்காகத்தயாரான கையெழுத் துப் பிரதிகள் பலவும் பின்னர் நூல்வடிவம்பெற்றன. இதனால் குழந்தை நூல்கள் பெருகுவதற்கு அந்தப் போட்டிகள் மறைமுகமாக உதவின.

இதே முறையைப் பின்பற்றி, குழந்தை எழுத்தா ளர் சங்கமும், கையெழுத்துப் பிரதிகளில் சிறந்த வற்றிற்குப் பரிசுகள் வழங்க விரும்பியது. உயர் திரு **ஏ.வி. மெய்யப்ப செட்டியார்** அவர்கள், குழந்தை இலக்கியத்துறையின் இருதுறைகளுக்கு, முதற்பரிசு களாக இரு தங்கப்பதக்கங்களும்,இரண்டாம்பரிசாக இரு வெள்ளிப்பதக்கங்களும் வழங்க மனமுவந்து தாமாகவே முன்வந்தார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாக ஏ.வி. எம் பரிசுப் போட்டிகள் வெற்றியுடன் நடந்து வருகின்றன.

1975 ஆம் ஆண்டு நடந்த கவிதைப் போட்டியில் இரண்டாவது பரிசுபெற்ற கையெழுத்துப்பிரதிதான் இப்போது "இளைய பாரதம்" என்னும் நூலாக உருப் பெற்றுள்ளது.

1961 ஆம் ஆண்டிலே ஆறுவயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பாட்டுப்போட்டி ஒன்றை குமுதம் நடத்தியது. அந்தப் போட்டியிலே **பூனையக்கா** எனும் பாடலுக்காகப் பாரட்டுப்பெற்றவர் திரு. பொன்ராசன். இவர், கவிதை உலகுக்கோ குழந்தை உலகுக்கோ புதியவர் அல்லர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இராமச் சந்திரபுரம் உயர் நிலைப்பள்ளியில் தவத்திரு அடிகளாரும் நானும் அந்தக் காலத்தில் உடன்பயின்றவர்கள். இதை நான் அடிக்கடி பெருமையோடு நண்பர்களிடம் கூறுவதுண்டு.

கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் ஆதரவளித்து அவர்களை அன்போடு பாராட்டும் இலக்கிய நெஞ்சம் கொண்ட தவத்திரு அடிகளார் அவர்களின் பேரன்பைப் பெற்றவர் கவிஞர் பொன்ராசன். அடிகளார் நிறுவிய உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றும் பேறும் பெற்றவர்.

அவரது, இளைய பாரதம் நூலில் உள்ள பாடல்களில் "**பயன் தரும் வித்தை**" எனும் பாடல், கேள்வி பதில் வடிவில் சிறப்பாக அமைந்துள்ளது. வேறு எந்த விந்தையான வித்தையையும் விட, கல்வி ஒன்றுமட்டுமே மாணவரின் கவனத்தை ஈர்க்கச் செய்வதும், ஒரே மூடை விளைவதில் ஒன்பது மூடை விளையச் செய்வதும் தான், பயன் தரும் வித்தை-என்னும் கருத்தும் சிறப்பாக இருக்கிறது!

குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் என்றென்றும் வாழ்ந்து வரும் நேருமாமாவைப் பற்றிய பாடல் மிகச்சிறப்பாக அமைந்துள்ளது.

'தடத்தில் செல்லுவோம்'எனும் பாடலில் ரயில் தண்டவாளத்துடன் ஒழுக்கத்தை ஒப்பிட்டு,

உலகில் நாமும் ரயில் போன்றே
ஒழுக்கத் தண்டவாளத்தே
நிலையில் தெளிந்து செல்வோமேல்
நினைக்கும் வாழ்வைப் பெறலாமே!

என்பதும்,

வளம் வேண்டுமானால் வனங்களும் வேண்டும், வனங்கள் அழியாதிருக்க அவைகளில் விலங்குகளை வாழவிடவேண்டும் எனும்கருத்துக்களைவலியுறுத்தும் 'மரங்களை வளர்ப்போம்', 'வாழ விடுங்கள்' எனும் பாடல்களும் பாராட்டும்படி உள்ளன.

நம் வீட்டில் வாழும் ஈ, கொசுவை விடக் கொடியனவையா வனத்தில் வாழும் சிங்கமும், புலியும்? என்று கேட்பது சிந்திக்கத் தக்கதாயுள்ளது!

இப்படிச் சிறுவருக்குப் பயன்தரும் பாடல்களை இயற்றித் தந்துள்ளார் கவிஞர் ரா. பொன்ராசன் அவர்கள்.

அவர்கள் கவிதைத் தொண்டு மேன்மேலும் சிறப்புற்றோங்க வாழ்த்துகிறேன்.

உமா இல்லம்,
மனை எண் 2884,
அண்ணா நகர்,
சென்னை-40.

(ஒ-ம்) அழ. வள்ளியப்பா
9-11-76

உள்ளத்திலிருந்து...

வருநாள் உலகின் வரலாற்றை உருவாக்கப் போகிறவர்கள் இன்றைய இளம் தலைமுறையினர். ஒளி படைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும் கொண்டவர்களாக அவர்கள் உருவானல் தான் எதிர்காலம் இன்ப மயமானதாக அமையும். அதற்கு இளைய பாரதம் நூல்,சேதுக்கரை அணிலின் வால்மண் அளவாவது பயன்படுமானல் நெஞ்சம் நிறைவடைவேன்.

குன்றக்குடி மண் விசேஷச் சிறப்புடையது. அருள், அன்பு, கலை, இலக்கியம் முதலியவற்றை வளர்த்து ஊக்கும் திறன் பெற்றது. எல்லாவற்றிற்கும் மேலாக உழைப்பை மதித்து ஊக்கம் தருவது.

வெறும் ஆசிரியர் பொன்ராசனுக குன்றக்குடிக்கு வந்த என்னை, மாநில அளவில் பரிசு பெறும் கவிஞனுக உருவாக்கியிருப்பது குன்றக்குடிதான்.

குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசு விவரம் தெரிந்ததுமே குன்றக்குடியே குதூகலம் கொண்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. பெற்றது இரண்டாம் பரிசு. அதற்காகக் குன்றக்குடியில் நடந்த பாராட்டு விழாக்கள் மூன்று.

இந்த அளவு ஊக்கம் தரப்பெறுமானல் கல்லும் சொல்லாதோ கவி?

'இளைய பாரதம்' நூல்வடிவம் பெற,ஆர்வத்தோடு முயற்சி எடுத்துக் கொண்டவன் என்பையன் ராஜேந்திரன். அவனுக்குத்துணை நின்றவர் அவனுடைய நண்பர் ஆராய்ச்சித்துறையினரான திரு. அ. சீநிவாசன் அவர்கள். இருவருமே சரியான கவிதைப் பைத்தியங்கள்.

நூலின் அட்டையை உருவாக்கித் தந்திருப்பவர் கலைஞர் திரு. கரு. மாமுண்டி அவர்கள். நூலாக்க முயற்சியில் பல்லாற்ருனும் எனக்கு உதவியவர்கள் கவிஞர். பரமகுரு அவர்கள், தமிழாசிரியர் கதிரேசன் அவர்கள்,என் ஆசிரியர் ஞானவேலர் அவர்கள்,புலவர் வாணன் அவர்கள், குன்றக்குடி பெரிய பெருமாள் அவர்கள். . .

மன்னிக்கவும். பட்டியல் இன்னும் நீளும். விரிவஞ்சி விடுகிறேன்.

எனது இலக்கிய முயற்சிகள் அனைத்துக்குமே ஆதாரசக்தியாக, அருட்சக்தியாக இருப்பவர்கள் எங்கள் தவத்தந்தை அவர்கள். 61 தொடங்கியே என் இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வருபவர் குழந்தைக் கவிஞரவர்கள்

இவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களில் பல அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்தவை 'பாட்டி' 63ல், குழந்தைக் கவிஞர் தலைமையில் அரங்கேறி, பின்னர் தமிழ்நாடு ஞாயிறு மலரில் மணம் பரப்பியவர். 'தாத்தா' கல்கியில் பவனிவந்தவர். 'அந்தக்காலமும் இந்தக்காலமும்' தமிழரசுவில் வெளிவந்தது. 'தடத்தில் செல்வோம்,' 'உலகம் சுற்றுவோம்', 'உலகமனிதன் ஆவோம்' 'உலகஅதிசயம்' ஆகியவை திருச்சி வானொலியில் ஒலி பரப்பானவை. வெளியிட்டவர்களுக்கும், ஒலி பரப்பியவர்களுக்கும் நன்றி.

நூல் அச்சிட்டுக் கொடுத்த அண்ணா அச்சகத்தினரின் ஒத்துழைப்பு பாராட்டிற்குரியது.

ஒரு வேண்டுகோள். இந்தச் சிறு நூலைப்பற்றிய தங்கள் மேலான கருத்தை எழுதி உதவுங்கள். திறன் மிக்க திறனாய்வுகள், இலக்கியத்திற்கு வலிவூட்டும் உரமாக அமையும்.

குன்றக்குடி.
623206
14-11-76

அன்புடன்,
ரா. பொன்ராசன்

பணிந்து உயர்வோம்

ஆற்றங் கரைப் பிள்ளையார்;
அருள் வடிவப் பிள்ளையார்;
காற்று வானம் பூமிபோல்
கருணை காட்டும் பிள்ளையார்!

காற்று வானம் பூமிபோல்
கருணை காட்டும் தெய்வத்தைப்
போற்றிப் போற்றி வணங்கவே
போவோம் வாரும் பிள்ளைகாள்.

காற்று வானம் பூமிபோல்
கருணை காட்டும் தெய்வத்தைப்
போற்றிப் போற்றி வணங்கினால்
புத்தி சக்தி வளருமாம்!

புத்தி சக்தி வளர்ந்துநாம்
புகழ் பெருகி வாழவே
நித்த நித்தம் அவனருள்
நினைந்து நினைந்து பணிகுவோம்!



மலையும் வெல்லுவோம்

அன்புத் தம்பி ஓடிவா;
அழகு மலையைக் காணலாம்;
இன்பம் கொஞ்சும் மலையிதில்
ஏறி நாமும் மகிழலாம்:

அழகு தவழும் மலையிது;
அருவி வழியும் மலையிது;
மழை பொழியும் முகிலினை
தலையில் தாங்கும் மலையிது!

மரங்கள் அடர்ந்த மலையிது;
மருந்தும் நிறைந்த மலையிது;
சிறந்த வளங்கள் பலவுமே
சேர்ந்து நிறைந்த மலையிது!

மலையைக் கூட வெல்லுவார்
மனத்தில் உறுதி பூண்டவர்
எலியும் உணர்ந்த இதனை நாம்
என்றும் உணர்ந்து வாழுவோம்!

ஊருக் குழைப்போம்

கேட்டது:

ஆறே ஆறே நில்லாறே!
அன்பாய்ப் பதிலைச் சொல்லாறே!
யாரே உன்னைப் பெற்றோர்கள்?
யார்தாம் உனக்கும் உற்றோர்கள்?

சொன்னது:

மலையும் முகிலும் பெற்றோராம்!
வயலும் காடும் உற்றோராம்!
அலையும் கடலே எனையேற்கும்
அன்புக் கணவர் ஆவாராம்!

கேட்டது:

ஊருக் கெல்லாம் நீரீவோய்
உணவுக் காகும் வளிமீவோய்
சேவைக் காகப் பதில்கூலி
சிறிதும் பெறுதல் உண்டோ நீ?

சொன்னது:

ஊருக் குழைத்தல் கடனாகும்!
உயிரே சிறக்க வழியாகும்!
பாருக் கெல்லாம் இதைச்சொல்ல
பகவான் என்னைப் பணித்தாராம்!

உழைத் துண்போம்

ஆறு சுவை விருந்திதோ
அம்மா தரப் போகிறுர்!
ஊருக் கெல்லாம் வழங்குவார்
உண்ண வாரும் தோழர்காள்!

எங்கள் வீட்டு விருந்திலே
என்ன என்ன இருந்திடும்?
எண்ணிப் பார்த்துச் சொல்கிறேன்
ஏற்கு மெனின் வருகுவீர்!

பருப்புச் சோறு நெய்யுடன்
பல வகையாம் காய்கறி
விருப்பி ஞேடும் உண்ணவே
வேண்டு மளவு இருந்திடும்!

மா, பலா, வாழையும்
மற்ற சுவைக் கறிகளும்
தேன் சுவைப் பானமும்
தெவிட்டு மளவு கிடைத்திடும்!

உண்ண உண்ணச் சுவைத்திடும்!
உடல் நலமும் வளர்ந்திடும்!
இன்னும் உண்ணும் எண்ணமே
எவர்க்கும் அங்கே எழுந்திடும்!

அந்த நல்ல விருந்தினை
அருந்திச் சுவைத்து மகிழவே
என்றன் நல்ல தோழர்காள்
எழுந்து வாரும் விரைவிலே!

ஒன்று சேர்ந்து உண்ணுவோம்!
ஒருமைப் பாட்டைப் பேணுவோம்!
என்றும் நம்முள் பேதங்கள்
இல்லா மலே பண்ணுவோம்!

உணவும் மற்றும் பொருள்களும்
உடல் உழைப்பில் விளைவதே!
இதனை மட்டும் முதலிலே
இருத்திக் கொள்வோம் மனத்திலே!



அடுக்கடுக்காய்

அடுக் கடுக்காய் மல்லிகைப்பூ
அழ கழகாய் மலர்ந்த பூ
ஆண்ட வனின் பூஜைக்காய்
அம்மா வாங்கி வந்த பூ!

கொத்துக் கொத்தாய் அவரைக்காய்
கொடியில் தொங்கும் அவரைக்காய்
நித்தம் நாங்கள் உழைத்ததால்
நிறையக் காய்த்த தவரைக்காய்!

சீப்புச் சீப்பாய் வாழைக்காய்
சிறந்த ஜாதி வாழைக்காய்
பாப்பா உண்டு மகிழ்தற்காய்
பழுக்கப் போகும் வாழைக்காய்!



வணக்கம் மரக்குலமே

உலகில் உள்ள மரங்களே
உமக்குக் கோடி வணக்கங்கள்;
பலவும் நும்மில் பாடங்கள்
படிக்க வேண்டும் மனிதர்கள்!

தீமை செய்யும் கயவர்க்கும்
தேர்ந்து நன்மை செய்கிற
மேன்மை கொண்ட மனிதர்கள்
மிகச் சிலரே உலகினில்!

தம்மை வெட்டு வோரையும்
தாங்கி நிழல் தருகிற
செம்மை மிக்க மரங்களே
ஜெகத்தில் மிக அதிகமாம்!

உயிர் துறந்த பின்னரும்
உலகுள் ளோருக் குதவிடும்
உத்த மர்கள் மனிதரில்
ஒரு சிலரே இருப்பராம்!

பட்டுப் போன பின்னரும்
பல வகையாய்ப் பயன்படும்
மெத்த நல்ல மரங்களே
மே தினியில் அதிகமாம்!

ஆறு அறிவுத் திறத்தினுல்
அவனி முற்றும் அழித்திடும்
பேர் அறிவு பெற்ற எம்
பெரிய பெரிய மனிதர்கள் . . .

செத்தும் பிறர்க் குதவிடும்
செம்மைப் பண்பு நலத்திணை
சற்று நும்மில் கற்றிடின்
சாந்தி எங்கும் நிலவுமே!

இதனை எல்லாம் உணர்ந்துதான்
எங்கள் நாட்டு ஞானிகள்
தவ மிருக்க நும்மடி
தஞ்ச மென்று சார்ந்தரோ!



மரங்கள் வளர்ப்போம்

கோடை வெயில் கொளுத்துவதாய்க்
குமுறுகின்றேரே-வெயில்
கொடுமையினைக் குறைத்துக் கொள்ள
வகையறி யீரா?
பாடுபட்டு மரங்கள் நட்டு
வளர்த்து விட்டாலே-நமது
பரம்பரைக்கும் நிழல் கிடைக்கும்
மறந்து விட்டீரா?

மன்னுயிர்க்கு நல்ல காற்றை
மரங்கள் வழங்கும்-நாட்டில்
மண்ணரிப்பு நேர்ந்தி டாமல்
மரங்கள் தடுக்கும்
விண்ணிருந்து மழை பொழிய
மரங்கள் உதவும்-இன்னும்
விதவிதமாய் மரங்களாலே
பயன்கள் விளையும்!

வளருகின்ற தலைமுறைக்கும்
வளங்கள் தரவே-நல்ல
வகையறிந்து முடியு மட்டும்
மரங்கள் வளர்ப்போம்!
நிலவைக் கூட வெற்றி கொள்ளக்
கற்றுவிட்டோமே-இன்னும்
நிலத்தை இங்கே பாலையாக
விட்டிட லாமா?

வாழவிடுங்கள்

வனத்தில் வாழும் விலங்குகளை
அழித்து விடாதீர்-நமக்கு
வளமளிக்கும் மழைப் பொழிவைக்
கெடுத்து விடாதீர்:
வனங்களாலே மழைப் பொழிவே
அதிகமாகு மாம்! அங்கு
வாழ்ப வற்றை அழித்தால் மழை
குறைந்து போகுமாம்!

காவல் வைத்துத் தோட்டத்தை நாம்
காப்பது போன்றே-இயற்கை
காவலுக்கே விலங்கினத்தை
வனத்தில் வைத்ததாம்!
காவலரைக் கொன்று விட்டால்
தோட்டம் என்னாகும்? -அந்தக்
கதை நடக்கும் வன விலங்கை
நாம் அழித் தாலே!

சிங்கம், புலி, கரடி என்னும்
விலங்குக ளாலே - நாட்டில்
செத்தவர்கள் எத்தனை பேர்
சொல்ல முடியுமோ?
இங்கு நந்தம் வீட்டில் வாழும்
ஈ, கொசு வாலே-நாளும்
இறப்பவர்கள் தொகை சிறிதாய்க்
கொள்ள முடியுமோ?

கருணை காட்டி விலங்கி னத்தைக்
காட்டில் வளர்ப்போம் -சற்றே
கடுமை காட்டும் விதியதற்காய்
நாட்டில் வகுப்போம்!
வரிப் புலியைக் கொடியில் ஏற்றி
வணங்கிடும் நாமே - இங்கு
வன விலங்கை வாழ வைக்கத்
தயங்கிட லாமா?



பருவங்கள்

தம்பி:	ஆறு	வகைப்	பருவங்கள்
	ஆண்டுக்	குள்ளே	இருக்குமே
	யார்	அறிந்து	கூறுவார்?
	யான்	அறியக்	கூறுவீர்.
அக்கா:	நான்	எடுத்துக்	கூறுவேன்
	நன்கு	கற்றுத்	தேறுவாய்
	வேண்டு	மென்னும்	தம்பிக்கும்
	விளக்க	மாகக்	கூறுவாய்
	சித்தி	ரை	வைகாசி
	சேர்ந்த	தின	வேனிலாம்;
	ஆனி	ஆடி	மாதங்கள்
	ஆகும்	முது	வேனிலாம்.
தம்பி:	ஆவணி	புரட்டாசி?	
அக்கா:	அமையும்	கார்	காலமாய்
தம்பி:	ஐப்பசி	கார்த்	திகை?
அக்கா:	ஐயோ	குளிர்	காலமே!
தம்பி:	மார்க	ழியும்	தையுமே
அக்கா:	மாடி	நனைக்கும்	முன்பனி
தம்பி:	மாசி	பங்குனி	மாதங்கள்
அக்கா:	மச்சும்	நனைக்கும்	பின்பனி

இருவரும்:

பருவம்	இவை	ஆறுதாம்
படித்து	நன்கு	தெளிகுவோம்
வருப	வர்க்கும்	விளக்கலாம்
வாழ்ந்து	வாழ்ந்து	சிறக்கலாம்

பள்ளிக்கூடமும் சந்தைக்கூடமும்

சந்தைக்கடை பார்த்துவந்தோம்
சின்னமா மா- சில
சரக்குகளை வாங்கிவந்தோம்
சின்ன மா மா!
பார்த்துவந்த சந்தையது
சின்ன மா மா-எங்க
பள்ளிக்கூடம் போலிருக்கு
சின்ன மா மா!

உலகில் உள்ள பொருள்களிலே
சின்ன மா மா சந்தைக்கு
ஒரு சிலவே வந்துளவாம்
சின்ன மா மா!
ஒரு சிலவே வந்ததிலும்
சின்ன மா மா- நாங்கள்
ஒருசிலவே வாங்கிவந்தோம்
சின்ன மா மா!

உலகில் உள்ள பொருள்களிலே
சின்ன மா மா-பள்ளி
ஒரு சிலவே கற்றுத்தரும்
சின்ன மா மா
ஒரு சிலவே தருவதிலும்
சின்ன மா மா - நாங்கள்
ஒரு சிலவே கற்பதுண்டு
சின்ன மா மா!

சந்தை எல்லை வெளிப்புறத்தும்
சின்ன மா மா -பல
சரக்குலகில் இருப்பதுபோல்
சின்ன மா மா
பள்ளி எல்லை வெளிப்புறத்தும்
சின்ன மா மா-நாங்கள்
படிப்பதற்கு நிறைய உண்டே
சின்ன மா மா!

யார் அவர்

அருமை யாகத் தூங்குவார்
அடுப்பங் கரைச் சாமியார்!
விருந்து வாசம் வந்ததும்
விரைந் தெழுந்து ஓடுவார்!

புலியைப் போலத் தோன்றுவார்:
பொது விடத்திம் காணுவார்;
எலி பால் இறைச்சிகள்
எங்கே என்றே தேடுவார்!

உரியில் தாவி ஏறுவார்
உதைக்கப் போனல் சீறுவார்:
பரிவு காட்டு வோரிடம்
பக்கு வமாய்ப் பழகுவார்!

இவ் வளவு செய்தாலும்
எள் ளளவு அசுத்தமும்
இல் லாமலே காணுவார்
எங்கள் வீட்டுச் சாமியார்!

யாரே இந்தச் சாமியார்
யாரே இங்குக் கூறுவார்
நானு ரைத்த சாமியார்
நாம் அறிந்த பூனையார்!

அரசவைக் கலைஞர்

அழகு நடனம் கற்றவர்
அரசு விருதும் பெற்றவர்
பள பளக்கும் நீலவான்
பட்டு டலும் கொண்டவர்

அரச ருக்கும் வாய்த்திடா
அழகு மணி முடியினை
தலையில் தாங்கும் நினைவிலே
தலை நிமிர்ந்து நிற்பவர்

உலகில் உள்ள அழகெலாம்
ஒன்று சேர்த்துத் தன்னெழில்
உடலில் தாங்கும் செருக்கினுல்
ஒய்யா ரமாய் நடப்பவர்

மேக நாதன் மேளமும்
மின்னல் ராணிக் கோலமும்
காண நேரும் போதெல்லாம்
களிப்பில் ஆடும் நர்த்தகர்

யாரே இந்த வித்தகர்?
யாரே கூற வல்லவர்?
ஆறு முக வேலவர்
அணைத்துக் கொண்ட மயிலவர்!

மயிலைப் போல நடனமும்
மற்றும் மேன்மைக் கலைகளும்
முயன்று நாமும் கற்றிடின்
முழுமை இன்பம் காணலாம்!

அம்மா

(—o—)

அண்ணா:

உன்னைப் பெற்ற தாரம்மா?
உணர்ந் தெனக்குக் கூறம்மா
கண்ணே பொன்னே என்றுன்னைக்
கட்டிக் காப்ப தாரம்மா?

தங்கை:

அன்னை என்னும் தெய்வம்தான்
அன்றே என்னைப் பெற்றதாம்:
இன்னும் என்னைக் காப்பதும்
என்றன் அந்தத் தெய்வம் தான்!

அக்கா:

பெற் றெடுத்துத் தந்ததும்
பேசக் கற்றுத் தந்ததும்
உற்ற நோய்கள் தீர்ப்பதும்
உயிர் அனைய அன்னைதான்

இருவரும்:

அன்னை தந்தை இருவரும்
ஆவர் தெய்வம் உலகிலே;
என்றும் இந்த உண்மையை
இருத்தி வைப்போம் மனத்திலே!

அப்பா

தெய்வம் என்று பணியவே
தேடிச் சென்றேன் அன்னையை;
தெய்வ மான அன்னையோ
தொழுது நின்றார் தந்தையை!

எனக்கும் கூடத் தெய்வமாய்
இருப்பவர் உன் தந்தையார்
இந்த வீட்டின் தலைவரும்
என்றும் உன்றன் தந்தையே!

'தேடிப் பொருள் சேர்ப்பதும்
தேவை கண்டு தீர்ப்பதும்
நாடி நம்மைக் காப்பதும்
நாளும் நின்றன் தந்தையே!

என்றே என்றன் அன்னையார்
எடுத் தெனக்கு விளக்கினார்
இந்த நல்ல உண்மையை
எவர் மறுப்பர் உலகிலே!

பாப்பா

சின்னஞ் சிறு பாப்பா
செல்ல மணிப் பாப்பா
எண்ணம் உள்ள எவர்க்கும்
இனிமை தரும் பாப்பா!

பூவைப் போல இருக்கும்
பொழுதெல் லாமும் சிரிக்கும்
தாவித் தாவிக் குதிக்கும்
தங்க மணிப் பாப்பா!

கள்ளம் கப டில்லா
உள்ளம் உள்ள பாப்பா
கல்வி செல்வச் செருக்கால்
கறை படாத பாப்பா!

தெய்வ நிலை மாருத்
தென் தமிழ்ப் பாப்பா
செய்வ தெல்லாம் எவர்க்கும்
சிந்தை நிறை வளிக்கும்!

சின்னஞ் சிறு பூப்போல்
சிரிக்கும் இந்தப் பாப்பா
இன்னும் சில நாளில்
யாரைப் போல மாறும்?

பாட்டி

(—O—)

எங்கள் பாட்டி நல்லவர்
எல்லா ருக்கும் மூத்தவர்
இன்பம் கொஞ்சும் கதைகளை
இனிக்க இனிக்கச் சொல்பவர்!

அன்பு மிக்க அம்மாவை
அன்றே பெற்றுத் தந்தவர்
அவ்வைப் பாட்டி போலவே
அரிய நீதி சொல்பவர்!

வாழ்வின் முழுமை கண்டவர்
வாக்கில் வலிமை கொண்டவர்
ஆழ்ந்த ஞானம் பெற்றவர்
அன்பே உரு வானவர்!

வானம் கூடப் பாட்டியின்
வளர்ந்த புகழ் உணர்ந்துதான்
கூனப் பாட்டி உருவினை
கொண்டதோ தன் நிலவிலே?

தாத்தா

வீட்டு வாயில் திண்ணையில்
வீற் றிருக்கும் தாத்தாவைப்
பாட்டுப் பாடி வணங்கவே
பாப்பாக் களே வாருங்கள்.

வாழ்ந்து வாழ்ந்து அநுபவ
வைரம் பாய்ந்த பெரியவர்;
வாழும் வழி நமக்கெலாம்
வகுத்துக் காட்ட உரியவர்!

குழந்தை போலக் குணத்தையும்
குறைவில் லாத திறத்தையும்
பழத்தைப் போலக் கனிவையும்
பக்குவ மாய்ப் பெற்றவர்!

கடவுள் மீது பக்தியும்
கதைகள் சொல்லும் உத்தியும்
குடும்பம் காக்கும் சக்தியும்
குறைவி லாமல் கொண்டவர்!

மொத்த மாகக் கூறினால்
முதிர்ந்த தாத்தா இனத்தினர்
நித்த நித்தம் நாமெலாம்
நினைந்து பணியத் தகுந்தவர்!

காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா
கருணைத் தாத்தா
சாந்தத் தாத்தா
சத்தியத் தாத்தா

இம்சையை வெறுத்தார்
எளிமையை மதித்தார்
உழைப்பைப் போற்றினர்
உண்மையைத் துதித்தார்!

காந்தித் தாத்தா
கருணைத் தாத்தா
சாந்தத் தாந்தா
சாந்தியைத் தா-தா



மீண்டும் வாருர் மாமா

நேரு மாமா நேரு மாமா
எங்கே போனீங்க?-எங்க
நினைவை யெல்லாம் மறந்து விட்டு
எங்கே போனீங்க?
பாரதத்தைத்; தவிக்க விட்டு
எங்கே போனீங்க-இந்தப்
பார் முழுதும் கலங்கவிட்டு
எங்கே போனீங்க?

வானவர்க்கும் பஞ்ச சீலம்
வழங்கப் போனீரா?- அங்கும்
வாழ்க்கை முறை இலக்கணத்தை
முழங்கப் போனீரா?
ஞான காந்தி போன இடம்
தேடிப் போனீரா? வேறு
நாளில் வரத் திட்ட மிட்டே
ஓடிப் போனீரா?

பூ முகத்தைப் பார்க்கும் போது
உன் முகம் தோன்ற-நாட்டின்
புதுமை யெல்லாம் பார்க்கும் போது
உன் முகம் தோன்ற
பாலர் முகம் பாக்கும் போதும்
உன் முகம் தோன்ற-வானப்
பாதையையே பார்த்து-நின்றோம்
வந்திடும் மாமா!

-: வரலாறு படைப்போம் :-

டிக்கு டிக்கு டிக்கு டிக்குக் கடிகாரம்;
தேதி மணி நாளும் காட்டும் கடிகாரம்.
அக்கா மணிக் கட்டில் கட்டும் கடிகாரம்;
அத்தானுக்கே அப்பா தந்த கடிகாரம்!

எங்கள் நாட்டில் செய்த இந்தக் கடிகாரம்
எந்த நாடும் போற்றி வாங்கும் கடிகாரம்
தங்கத்தாலே செய்த இந்தக் கடிகாரம்
தங்கை தம்பி கைக்கும் அது மணியாரம்!

நித்த நித்தம் மணிபார்க்கும் பெரியோரே
நெஞ்சுறுத்தும் உண்மையொன்றை அறிவீரா?
எத்தனை தான் நாம் முயன்று தடுத்தாலும்
இன்றைய நாள் நாளை வந்தால் இருக்காதே!

ஓடிவிடும் காலமெனும் உணர்வோடும்
உள்ளமெங்கும் ஓங்கும் பெரும் துணிவோடும்
நாடி நறும் செயல்களே புரிவோமேல்
நாமிருக்கும் காலம் பெரும் வரலாறும்!

கற்றுத் தேறுங்கள்

அழகு தவழும் உலகிலே
எளிய பயண சாதனம்
பழகி ஞேர்க்குத் தோழனுய்
பாயும் சைக்கிள் வாகனம்

முதுகில் நம்மைத் தாங்கிடும்
முகத்தில் விளக் கேந்திடும்
முழக்குமணி நிறுத்து விசை
முன்னுல் கையில் ஏற்றிடும்

ஆற்றல் சக்கரம் பின்னுலே
அழகுச் சக்கரம் முன்னுலே
காற்ற டைத்த உடையைச் சுற்றிக்
கணக்காய்ச் சுற்றும் மண்மேலே

தொடங்கும் போது துன்பமாய்த்
துணிந்து கற்ருல் இன்பமாய்
விளங்கும் சைக்கிள் உண்மையை
விளங்கிக் கொண்டால் நன்மையாம்!'

கவி மணியார் மனத்தையும்
கவர்ந்து விட்ட சைக்கிளை
புவி மணிகாள் நாமுமே
போற்றிக் கற்றுத் தேறுவோம்!

நெஞ்சில் நிறுத்துங்கள்

மோட்டா (ர்)க் கார் வருகுது
முழக்கம் இங்கே கேட்குது
போட்டா போட்டி வேகத்தில்
புகையும் கூடப் பறக்குது,

காரும் வந்து நிற்குது
காத்த கூட்டம் ஏறுது
தூரத் தொலை செல்லுவோர்
துடிப்புச் சற்று மாறுது.

ஆண் பெண்ணின் பிரிவினை
அங்கே கொஞ்சம் தெரியுது;
ஆனல் மற்ற சமத்துவம்
அவ் விடத்தே நிலவுது!

காரில் ஏறும் மனிதர்காள்
கவனம் ஒன்று கொள்ளுவீர் . .
கருணைத் தேவன் நமக்கெலாம்
கால்கள் கூடக் கொடுத்துளார்!

காரை ஓட்டும் கலைஞரே
கருத்தில் இதை நிறுத்துவீர்!
காருக் குள்ளே மன்னர் நீர்;
காக்கும் கடன் பெற்றுள்ளீர்!

வேகம் சற்றுக் குறையட்டும்
விபத்துக் களும் மறையட்டும்
போக வுள்ள பயணிகள்
போற்றி நும்மைப் புகழட்டும்!

தடத்தில் செல்வோம்

குக்கூ. . . குக்கூ. . . ரயில்வண்டி
கூவி ஓடும் புகை வண்டி
பார்க்கப் பார்க்க வியப்பூட்டும்
பார்க்குள் நீண்ட தொடர் வண்டி!

இருப்புப் பாதை மீதோடும்
இரவும் பகலும் இசைபாடும்;
கறுப்புக் கரியை உணவாக்கும்
'காலன்' கணக்கில் நீரேற்கும்'

சாதி மதத்தைப் பாராது;
சமமாம் பாதை மீருது;
ஏதும் இடர்கள் நேராக்கால்
இடையே வழியில் நிற்காது!

உலகுக் குள்ளே மிக நீண்ட
உருவைக் கொண்ட தொடர் வண்டி
ரயிலைத் தவிர வேறில்லை
ரயிலின் பயனுக் களவில்லை!

பலவாம் பெட்டி இணைந்தாலும்
.பலவே றுருவில் இருந்தாலும்
தலைமை எஞ்சின் பின்னால் தான்
தண்ட வாள மீதோடும்!

உலகில் நாமும் ரயில் போன்றே
ஒழுக்கத் தண்ட வாளத்தே
நிலையில் தெளிந்து செல்வோமேல்
நினைக்கும் வாழ்வைப் பெறலாமே!



உலகம் சுற்றுவோம்

கடலுக்குள்ளே நகரமொன்று
மிதந்து வந்ததாம் - அதைக்
காணக்காண உள்ளம் எங்கும்
மகிழ் வெழுந்த தாம்
மலை மலையாய் வரும் அலையை
வென்று வந்ததாம் - அது
மாநிலத்தில் நகர்கள் பல -
சென்று வந்ததாம்!

ஆட்களோடு பொருட்களையும்
ஏற்றி வந்ததாம் – நமது
அன்னை நாட்டின் பொருள்களுக்கு
மாற்ற வந்ததாம்
நாட்கள் பல கடல் நடுவில்
நகர்ந்து வந்ததாம்- பல
நாடுகளும் சுற்றிச் சுற்றி
விரைந்து வந்ததாம்!

கடல் கடக்கும் வித்தை நாமும்
கற்றிடு வோமா? - உலகக்
கடைகளுக்கும் பொருட்கள் கொண்டு
விற்றிடு வோமா?
படைகளுக்குள் கடல் பிரிவைக்
கண்டிடுவோமா? வீரப்
பண்பினுக்கே இலக்கணத்தைக்
கொண்டிடு வோமா?

நடை முறையில் இவைகள் யாவும்
நடக்கும் ஐயாவே - நாமும்
நல்ல வல்ல பிள்ளை களாய்ப்
படித்துயர்ந் தாலே!
படிப்பது தான் உயர் வடையும்
பாதை ஐயாவே - வேறு
பாதை யாவும் உபாதையாக
மாறும் மெய்யாவே!

உலக மனிதன் ஆவோம்

காற்றினில் ஏறியவ் விண்ணையும் சாடிடக்
கற்று விட்டோம் - திறம்
பெற்று விட்டோம்

நேற்று முன் நாளிலிவ் விந்தை விளைத்திட
நினைந்தவரே- நெஞ்சம்
நிறைந்திடுவீர்!

இரும்பும் பருந்தினைப் போலப் பறந்திட
எண்ணி விட்டீர் - நாங்கள்
பண்ணி விட்டோம்

விரும்பும் அளவுக்கு விண்ணை யடக்கியே
வெற்றி கண்டோம்- பெரும்
பெற்றி கொண்டோம்!

ஊருக்கும் ஊருக்கும் தூரமென்றே முன்பு
ஒதுங்கி நின்றீர் - சற்றே
ஒடுங்கி நின்றீர்

பாருக்குள் மட்டுமா? கோளுக்கேபாதையைப்
போட்டு விட்டோம் - துயர்
ஓட்டி விட்டோம்!

கோளுக்கும் பாதையைக் காணத் துணிந்தவன்
வளர்ந்திடு வான் - உளம்
உயர்ந்திடு வான்

நாளைக்கு மானுடன் உலக மனிதனாய்
மலர்ந்திடவே- இனி
மணந்திடு வான்!



மண்ணை விண்ணாக்குவோம்

வானத்து மேகத்தைத் தாண்டிடுவோம் -அந்த
வட்ட நிலாவையும் சீண்டிடுவோம்
நாளைக்கொர் கோளையும் எட்டிடுவோம்- அங்கு
நாம் வாழ வீடுகள் கட்டிடுவோம்!

நேற்றைய மனிதர் கனவுகளைச்- சற்றே
நெஞ்சி லிருத்தி நனவாக்கி
காற்றைக் கடலைப் பூமியினை- நந்தம்
கட்டளை ஏற்கப் பணித்திடுவோம்!

உள்ளத்தை நன்கு விரிவாக்கி - எந்த
உலகமும் சொந்த உறவாக்கி
நல்லதை எங்கும் விளைவாக்கி - எந்த
நாளையும் மேம்படச் செய்திடுவோம்!

மண்ணிலே விண்ணைப் படைத்திடுவோம் -உள
மாசுகள் யாவும் துடைத்திடுவோம்
எண்ணிய மேன்மை நிறைவுறவே - அந்த
இறையைத் தொழுது வழிபடுவோம்!

உலக அதிசயம்

அதிசய மாம் அதிசயம்
அனைத் துலக அதிசயம்
நினைத்துப் பார்க்கும் போதெலாம்
நெஞ்சி னிக்கும் அதிசயம்!

உலகு முற்றும் கைக்குளே
ஒடுங்கிப் பேச வைத்திடும்
கலை மலிந்த கருவியைக்
காணக் காண அதிசயம்!

காற்றுக் குள்ளே ஒலியினைக்
கரைத்து விட்டுக் கணத்துளே
வேற் றிடத்தும் இருந்ததை
விரைந் தெடுக்கும் அதிசயம்!

அதிச யமாம் அதிசயம்
அனைத் துலக அதிசயம்
நினைத்து நினைத்துப் பார்த்திடின்
நெஞ் சினிக்கும் அதிசயம்!

கல் லிருக்கும் அரிசியைக்
களைந் தெடுத்துப் பிரித்திடக்
கைக்குள் அதே இருப்பினும்
காலம் மிகவும் எடுக்கிறோம்;

பாலில் கொஞ்சம் நீரினைப்
பக்கு வமாய்க் கலந்திடின்
பாலை மட்டும் பிரித்திடப்
பாடு பட்டும் தோற்கிறோம்!

கைக்குள் அகப் படுகிற
கலப்புக் களைப் பிரிக்கவே
காலம் கால மாக நாம்
கஷ்டம் மிகப் படுகையில். . .

கணக்கி லாத ஒலிகளைக்
காற்றில் கொட்டி விட்டுடன்
நினைத்த நினைத்த இடமெலாம்
நின் றெடுப்ப தெங்ஙனம்?

எண்ணி எண்ணிப் பார்த்திடின்
இது மிகவும் அதிசயம்!
மண்ணுக் குள்ளே மானுடன்
மலர்த்தி விட்ட இரகசியம்!

ஒலியை மட்டும் அல்லவே. . .
உருவைக் கூடக் காட்டுதே
வளர்ந்து விட்ட அறிவியல்!
வாழ்க வாழ்க அறிவியல்!

அந்தக் காலமும் இந்தக் காலமும்

வீட்டு மாடி உச்சியில்
விளக்கை ஏற்ற விரும்பினுல்
பாட்டி உங்கள் நாளிலே
பட்ட பாடு கொஞ்சமா?

இன்று எங்கள் நாளிலே
எந்த மலே விளக்கையும்
இமைக்கும் விழி திறக்கும் முன்
ஏற்றி வைக்கக் கற்றுள்ளோம்!

உங்கள் நாளின் ஓசைகள்
ஓங்கித் தாவிப் பாயினும்
ஒரு சிறிது தூரத்தே
உருச் சிதைந்து மாயுமே . . ,

இன்று எங்கள் நாளிலே
எந்த நாட்டுச் சேதியும்
எண்ண வேகம் கடந்துடன்
எங்கும் வந்து சேருதே!

அந்த நாளில் காசிக்கு
யாரோ சென்று வந்ததை
அதிசயமாய்க் கருதித் தான்
ஆண்டு முற்றும் பேசினீர் . . .

இந்த நாளில் நிலவுக்கே
ஏறி விட்ட மானுடர்
வானின் வேறு கோளுக்கும்
வழி வகுத்துக் கொண்டுளார்!

இந்த நாளின் விந்தைகள்
இன்னும் கோடி கோடியாம்
இத்த னைக்கும் காரணம்
இந்த நாளின் அறிவியல்!



-: பயன் தரும் வித்தை :-

வித்தைக்காரர்:	எண்ணில்	லாத	வித்தைகள்
	இங்கு	செய்யப்	போகிறேன்
	கண்ணுள்	ளோர்கள்	யாவரும்
	கண்டு	மகிழ	வாருங்கள்!
தம்பி:	என்ன	என்ன	வித்தைகள்
	இன்று	செய்யப்	போகிறீர்?
	எடுத்	தெமக்கு	விளக்கினல்
	இருந்து	பார்த்துப்	போகிளும்
வி. காரர்:	தந்திக்	கம்பி	மீதிலே
	தாவி	ஓடப்	போகிறேன்.
	தலை	கீழாகக்	கம்பத்தில்
	தரை	இறங்கப்	போகிறேன்!
தங்கை:	பார்த்துப்	பார்த்துப்	புளித்திட்ட
	பழைய	வித்தை	இவையெலாம்
	வேறு	ஏதும்	இருந்திடின்
	விளக்க	மாகக்	கூறிடும்.

வி. காரன்: கத்தி விழுங்கப் போகிறேன்
கழுத் தறுக்கப் போகிறேன்
சுற்றி நிற்போர் பொருள்களைச்
சொல்லிக் காட்டப் போகிறேன்;

தம்பி: பிறகு? . . .

வி. காரன்: மணிக் கணக்கில் மண்ணுக்குள்
மறைந் திருக்கப் போகிறேன்;
மகாக் கொடும் பாம்பினை
மாலை சூடப் போகிறேன்;

வி. காரன்: இன்னும் பல வித்தைகள்
இதோ செய்யப் போகிறேன்–
கண்ணுள் ளோர்கள் வாருங்கள்–
காசு தந்து பாருங்கள்!

தம்பி: போதும் போதும் நிறுத்திடும்
பொறுமை ஓடிப் போய்விடும்.
ஏதும் நன்மை விளையுமோ
இந்த வகை வித்தையால்?

வி, காரன்:	இன்னும்	என்ன	வித்தைகள்
	என்னைச்	செய்யச்	சொல்கிருய்?
	எண்ணி	நீயும்	சொல்லிடின்
	இன்னும்	கற்றுக்	செய்குவேன்!
தங்கை:	கல்வி	ஒன்றே	மாணவர்
	கவனம்	ஈர்க்கும்	வித்தையைக்
	கற்று	வந்து	செய்திடின்-
	காண்ப	வர்க்கும்	பயன்தரும்!
தம்பி:	வீட்டி	லேயே	காய்கறி
	விளைக்கும்	விந்தை	செய்திடின்
	நாட்டுக்	கது	பயன்படும்
	நாளும்	நம்மை	வழிபடும்!
தங்கை:	ஒரே	முடை	விளைவதில்
	ஒன்ப	தை நீர்	விளைத்திடின்

தம்பி:	உலக	மேடை	அரங்கமும்-
	உமது	வித்தை	விரும்பிடும்,
தங்கை:	இவற்றில்	ஏதும்	இன்றி நீர்
தம்பி:	எவை	எவையோ	செய்திடின்
தங்கை:	எவருக்	கவை	பயன்தரும்?
	என்று	(உ)மக்குப்	புகழ் வரும்?
இருவரும்:	பலரும்	கண்டு	வியந்திடும்
	பலவும்	முயன்று	செய்தலின்
	உலகுக்	கெல்லாம்	பயன்தரும்-
	ஒன்று	செய்தல்	வன்மையாம்!



அளவோடு அமைக

பொன்னு மாமா வந்தனர்
புதிய சட்டை தந்தனர்
போட்டுக் கொண்டு நானுமே
போனேன் எங்கள் பள்ளிக்கு.

பள்ளிக் குள்ளே என்னையே
பார்த்த துமே மாணவர்
துள்ளி விழுந்து சிரித்தனர்
துடித்து விட்டேன் நானுடன்.

சின்னச் சட்டை இதுவுமே
சேர வில்லை உனக்குமே
என்று தோழர் விளக்கினர்
எடுத் தெறிந்தேன் சட்டையை!

பின்னொரு நாள் தாத்தாவோர்
பெரிய சட்டை தந்தனர்
அன்பி னோடு நானதை
அணிந்து சென்றேன் பள்ளிக்கு.

இன்று கூட மாணவர்
என்னைக் கண்டு சிரித்தனர்
என்ன சேதி என்றதும்
இது பெரிது என்றனர்.

தொள தொளக்கும் சட்டையைத்
தூக்கி மாட்டி வந்துள்ளாய்
அளவு மாறும் சட்டைகள்
அழகு தாரா என்றனர்

அன்புள் ளோர்கள் தருவதும்
அளவு மாறி இருந்திடின்
அழகில் லாமல் போவதை
அறிந்து நானும் வருந்தினேன்

பொறுத்த மில்லாச் சட்டையும்
பொறுத்த மில்லாப் புகழ்ச்சியும்
நிறுத்துப் பார்த்தால் ஒன்றுதான்
நெஞ்சில் இதை நிறுத்துவீர்!



நூலகம்

பொழு தெலாமும் ஓடி ஓடிப்
பூக்கள் தோறும் தேடித் தேடி
உலகம் யாவும் விரும்பும் தேனை
உவந்து சேர்க்கும் ஈக்கள் போல . . .

பொழு தெலாமும் கற்றும் கற்றும்
புதிய யாவும் ஆய்ந்தும் ஆய்ந்தும்
உலகம் யாவும் பயனைக் காண
உயர்ந்த நூல்கள் செய்வர்சான்ருேர்!

கோடிக் கோடிப் பூக்கள் தேனைக்
கூட்டிச் சேர்த்த அடையைப் போல
கோடிக் கோடி அறிஞர் நூல்கள்
கூட்டிக் காட்டும் நூல் அகங்கள்

உணவி ஞேடும் மருந்தும் ஆகி
உயிரும் வளர்க்கும் தேனைப்போல
உளத்தி ஞேடும் உயிரும் வளர்க்கும்
உயர்ந்த சான்ருேர் செய்யும் நூல்கள்!

ஆலயத்தை மதித்தல் போன்றே
நூலகத்தை மதிக்கும் யாரும்
ஞாலமுற்றும் மதித்துப் போற்றும்
ஞானமுற்றும் பெருகி வாழ்வார்!

உலகுக்கொரு நூல்

நல்ல வல்ல மனிதராய்
நாம் உயரும் வழியெலாம்
சொல்ல வல்ல நூல் எது?
சொல்லு வீரோ பிள்ளைகாள்!

எந்த எந்த நாட்டுக்கும்
எந்த எந்த நாளுக்கும்
ஏற்கும் நீதி யாவையும்
எடுத்துக் காட்டும் நூல் எது?

சாதி பேதம் களைந்ததாய்,
சமத்து வத்தில் விளைந்ததாய்,
வேதத் திற்கும் உயர்ந்ததாய்
விளங்கு கின்ற நூல் எது?

அகர உயிரில் பிறந்ததாய்
னகர மெய்யின் நிறைந்ததாய்
பகர வொண்ணுச் சிறப்பெல்லாம்
பாரில் பெற்ற நூல் எது?

பத்துப் பத்துப் பாக்களாய்ப்
பகுத்த அதி காரங்கள்
மொத்தம் நூற்று முப்பத்து
மூன்று நிற்கும் நூல் எது?

என்ன நூல் இந் நூல் என
எண்ணிச் சற்றுப் பாருங்கள்
எண்ணித் தேர்ந்து தெளிந்ததும்
எனக்கும் சற்றுக் கூறுங்கள்!

வையம் எல்லாம் வாழவே
வழி வகுக்கும் அந்த நூல்
பொய்யில் லாத திருக்குறள்
புரிந்து கொள்வோம் பிள்ளைகாள்!

நாளிற் கொரு குறளினை
நாமும் கற்று நடந்திடின்
வாழவு முற்றும் சிறந்திடும்
வையம் நம்மைப் புகழ்ந்திடும்

இன்றே அந்தக் குறளினை
எடுத்துக் கற்கத் தொடங்குவோம்
என்றும் அதன் நெறியையே
இதயம் கொண்டு விளங்குவோம்!



வெற்றிக்கு வழி

ஒரு வருட உணவினை
ஒன்று சேர்த்து வைத்ததை
உண்ணு மாறு வேண்டினால்
உண்ண உன்னால் முடியுமோ?

ஒரு வருட வேலையை
ஒட்டு மொத்த மாகவே
ஒரே நாளில் செய்திட
உன்னால் என்றும் முடியுமோ?

அன் றன்றைய பாடத்தை
அன்றே கற்றி டாமலே
ஆண் டிறுதி நாளிலே
யாரும் கற்க முடியுமோ?

அன் றன்றைய பாடத்தை
அன்றே கற்று முடிக்கவும்
அன் றன்றைய வேலையை
அன்றே செய்து முடிக்கவும்

இன்று முதல் நெஞ்சிலே
எண்ணம் கொண்டு நடந்திடின்
வெற்றி உன்னைத் தேடியே
வீடு வந்து சேருமே!